**ஹிக்கடுவ நகர சபை - 2023**
-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹிக்கடுவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹிக்கடுவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நன்கொடை ஒன்றாக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 600,000 தொகை பெறுமதியான 300 சோடி பூட்ஸ்கள் மற்றும் நுகர்வுப் பண்ட இருப்பை சேர்ந்த ரூபா 58,404 தொகைக்கான இருப்பை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நன்கொடை கிடைத்தவைகள் கணக்குகளுக்கு உட்படுத்தப்படவில்லை என. | நன்கொடை கிடைத்தவைகள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய நிர்மாண வேலைக் கணக்கின் மீதி ரூபா 158,431 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறினை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 9,049,803 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/01 சுற்றறிக்கை | | | |
| (i) பிரிவு 01 | சபைக்கு சொந்தமான வாராந்த சந்தை கடையறைகள் 17 வருட காலமாக டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த ஆண்டு வாராந்த சந்தை டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) பிரிவு 05 | ஹிக்கடுவ நகர சபைக்கு சொந்தமான 146 கடையறைகளில் 45 கடையறைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் அவற்றை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சுற்றறிக்கைக்கு இணங்க உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |
| (iii) பிரிவு 06 | 2012 ஆண்டின் பின்னர் ஹிக்கடுவ பொதுச் சந்தையில் 63 கடையறைகள் மற்றும் ஹிக்கடுவ 12 மீன் கடைகளின் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | புதிய பெறுமதி மதிப்பீடு 2024 ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க உரிய காலப் பகுதியில் பெறுமதி மதிப்பீட்டை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகள் இன்றி ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலத்திற்கும் இடையே 04 தடவைகள் பிரயாணம் செய்வதற்காக சபையின் வாகனத்தை பயன்படுத்தியிருந்ததுடன், அதன் எரிபொருள் செலவாக ரூபா 352,847 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதவிக்குரிய சலுகைகள் அனுபவிக்க முடியும் என. | கிரயம் குறைவாகக் கூடியவாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 32,920,984 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,964,982 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 25,269,759 | 36,545,992 | 39,460,140 | 39,403,532 | 21,176,683 | 21,729,523 | 26,538,285 | 42,317,680 |
| வாடகை | 12,197,400 | 7,733,555 | 10,715,402 | 1,325,979 | 6,033,080 | 6,870,525 | 6,823,862 | 4,307,826 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 524,300 | 554,810 | 555,610 | 47,555 | 935,000 | 565,375 | 565,375 | 48,355 |
| ஏனைய வருமானங்கள் | 8,385,000 | 8,961,407 | 8,961,407 | - | 6,776,000 | 4,002,879 | 4,002,879 | - |
| | 46,376,459 | 53,795,764 | 59,692,559 | 40,777,066 | 34,920,763 | 33,168,302 | 37,930,401 | 46,673,861 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 46,673,861 தொகையாகக் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அது ரூபா 40,777,066 தொகையாக காணப்பட்டது. | எதிர் காலத்தில் வருமானம் சேகரித்தலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபையில் காணப்பட்ட வீதவரிப் பதிவேடுகளில் மற்றும் கணினி மென்பொருளின் படி நிலுவை வருமான மீதியிடையே ரூபா 4,129,276 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | வித்தியாசங்களை இனங்கண்டு விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருக்காத சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஹோட்டல்கள் முறையே 88, 76 மற்றும் 83 தொகை தொடர்பாக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 165 அ(4) பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு தொடர்பாக 62 ஹோட்டல்களில் இருந்து 0.3% கட்டணம் அறவீடு செய்வதற்கு முடியுமாக இருந்ததுடன் அந்த தொகை ரூபா 11,271,644 தொகையாகும் என. | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹிக்கடுவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகள் சேகரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ள வேண்டியமையால் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 157 இற்கு இணங்க துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு 157(9) பிரிவிற்கு இணங்க குப்பை வரி ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறு சபையினால் நடவடிக்கை எடுக்கவில்லை. | குப்பை கட்டணம் அறவீடு செய்வதற்காக உரிய ரேட்கள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க குப்பை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 வருட காலம் முதல் காணப்பட்ட ரூபா 4,880,000 பெறுமதியான 03 வாகனங்கள் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஹிக்கடுவ நகர சபை கராஜில் நிறுத்தப்பட்டு உக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட நீர் பவுசரின் செசி தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சபையில் காணப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது என. | சபைக்கு சொந்தமான வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 02 வருடங்களுக்கும் 08 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 2,215,000 கிரயத்தையுடைய 02 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 04 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சிதைவடைந்திருந்தமையால் அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க அப்புறப்படுத்தல் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் 01 இயந்திரம் 06 மாதங்களுக்கும் 06 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | பொறியியலாளர் அறிக்கை பெற்றுக் கொண்டு திருத்த வேலை மேற்கொள்ளப்படும் என. | திருத்த வேலைகள் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹிக்கடுவ நகர சபைக்கு சொந்தமான பயன்படுத்தக் கூடியதாகவுள்ள ரூபா 9,180,000 தொகை பெறுமதியான 03 வாகனங்கள் 02 வருடங்களுக்கும் 16 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | சாக்கடை பவுசர் வேறு நிறுவனம் ஒன்றுடன் பரிமாற்றிக் கொள்வதற்கும், க்ரூ கெப் வாகனத்தை திருத்திக் கொள்வதற்கும், நீர் பவுசரை இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையின் மீது பொருத்தமான செயற்பாடொன்று மேற்கொள்வதற்கு | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஆ) | நகர சபைக்கு சொந்தமான 36 காணிகள் மற்றும் 03 ஏக்கர் 03 ரூட் 3.86 பர்சஸ் அளவான 14 காணிகளை சபையின் பெயரிற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு உரிய ஆவணங்கள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள, இடமாற்றம் பெற்றுள்ள சென்றுள்ள மற்றும் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ள 18 ஊழியர்களிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 478,541 இற்கான கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |